# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## අති විශෙෂ   அதிவிசேஷமானது

අංක 1841/18 - 2013 දෙසැම්බර් 20 වැනි සිකුරාදා - 2013.12.20

***1841/18 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

**(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில், அனலை தீவு , வடக்கு, ஜெ/ 37 கிராம சேவகர் பிரிவில், அனலை தீவு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. வைஏ/கேவைரீ/ 2012/77 மற்றும் 2012.04.27 ஆம் திகதியிடப்பட்ட நில வரைபடத்தில் 0.0500 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட அருள்மிகு ஸ்ரீ சங்கரநாதர் மஹா கனபதி பிள்ளையார் கோவில் என்றழைக்கப்படும் காணியின் எல்லைகள் :

01. **துண்டு 'ஏ' - அருள்மிகு ஸ்ரீ சங்கரநாதர் மஹா கனபதி பிள்ளையார் கோவில் காணி - விஸ்தீரணம் : 0.0500 ஹெக்டயார்**

வடக்கு : சன்முகம் ராஜரத்தினம் உரிமை கோரும் பனைவளவு தோட்டம் ; கிழக்கு : அருள்மிகு ஸ்ரீ சங்கரநாதர் மஹா கனபதி பிள்ளையார் கோவில் காணி, தோட்டம் அருள் சொத்து ; தெற்கு : வீடுகளிலிருந்து இறங்கு துறைக்கான (Jetty) பாதை (பிரதேச சபை) ; மேற்கு : பொண்ணம்பலம் மாகன்டு உரிமை கோரும் பனைவளவு தோட்டம்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

எனது இல.: 4/3/9/2011/டபிள்யூஎஸ்/214.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.05.16.

01 - 163

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், மெததும்பரை பிரதேச செயலாளர் பிரிவில், பலிஸ் பத்துவை மேற்கு கோரளை சிறு பிரிவில், மாபேரியதென்ன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. மஹ/எம்டீட/2011/267 மற்றும் 2011.10.25 ஆம் திகதியிடப்பட்ட முதற்சுவட்டு வரைபடத்தில் 2.1730 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணம் கொண்ட கீழ்க் காணப்படும் காணியின் எல்லைகள் :

01. **துண்டு 'ஏ' - விக்டோரியாத் தோட்டம் - விஸ்தீரணம் : 2.1730 ஹெக்டயார்ஸ்**

வடக்கு : ரஜவெல்ல ஹோல்டிங் (தனியார்) கம்பனி ; கிழக்கு : அரசு உரிமை கோரும் மாபேரியதென்ன தோட்டம் (விக்டோரியா நீர்த்தேக்க ஒதுக்கம்) ; தெற்கு : அரசு உரிமை கோரும் மாபேரியதென்ன தோட்டம் ; மேற்கு : பிரதேச சபை வீதி

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

எனது இல.: எல்டீ/05/2008/டீ/262.
பிரதேச செயலாளர் இல.: மெது/3/1/2/209.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.05.09.

01 - 164